**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.52/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 11** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சத்யன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**எதிரிகள் ஆஜரில்லை. பிடிக்கட்டளை நிலுவை.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் மாவட்ட டாஸ்மாக் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.08.2014 அன்று பெரம்பலூர் மாவட்டத்தில் நான் மேலாளராக பணியில் இருந்தபோது மதுவிலக்கு ஆய்வாளர் கொடுத்த தகவலின் பேரில் ஆயுதப்படை கல்யாணமண்டபம் சென்று பார்த்தபோது நிறைய கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் லேபிளுடன் இருந்தது. அதில்இருந்த Brand ல் Green Magic என்ற பிராண்ட் டாஸ்மாக் கடையில் விற்பனை செய்வது கிடையாது. Day night Brandy, Mens club, Honey bee ஆகியவை அந்த சமயத்தில் சில்லறை விற்பனை கடையில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. நான் பாட்டில்களில் ஒட்டப்பட்டிருந்த லேபிள் மற்றும் ஹோலோகிராம் ஸ்டிக்கர் ஆகியவற்றை பார்வையிட்டதில் அவை உண்மையானவை அல்ல, போலியானவை என்று சொன்னேன். பாட்டில்களின் மூடிகளில் வேறு கம்பெனி பெயர் அல்லது பெயரே இல்லாமல் இருந்தது. இதுசம்மந்தமாக நான் கருத்து தெரிவித்து நான் சான்று வழங்கினேன். அந்த சான்று அ.சா.ஆ.27, இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

டாஸ்மாக் மேலாளர் என்ற முறையில் என்னுடைய பணி என்பது கம்பெனியிலிருந்து வரும் சரக்குகளை குடோனில் தேக்கிவைத்து, சில்லறை

விற்பனை கடைகளுக்கு அந்தந்த கடையின் மேற்பார்வையாளர் மாவட்ட மேலளார் அலுவலத்திற்கு சமர்பிக்கும் கேட்புவிவர பட்டியல் படி அந்தந்த கடைகளுக்கு சரக்குகளை அனுப்பிவைப்பது, மேலும் கடைகளில் விற்பனை ஆகும் சரக்குகளின் எண்ணிக்கை மற்றும் விற்பனை தொகைகளை ஒழுங்காக இருசால் செய்யப்படுகிறதா என்பதை கண்காணிப்பது, கடை பணியாளர்களுக் சம்பளம் கொடுப்பது, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது, இதுசம்மந்தமாக மாவட்ட ஆட்சியர் கூட்டங்களில் கலந்துகொள்வது மற்றும் தலைமை இடத்து கூட்டங்களில் கலந்து கொள்வது ஆகியவை ஆகும். நான் அறிவியல் பூர்வமான சோதனைக்கு லேபிள் மற்றம் ஹோலோகிராம் ஸ்டிக்கரை அனுப்பி கருத்து தெரிவிக்கவில்லை. அவற்றை பார்த்து அவை போலியானவை என்று கண்டுபிடித்து சொன்னேன். எந்தெந்த காரணங்களின் அடிப்படையில் அவை போலியானவை என்று குறிப்பிட்டு போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த விவரத்தை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று எந்த வழக்கு தடயங்களையும் பார்வையிடவில்லை என்றும், அதனை ஆய்வு செய்யவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யான அறிக்கை கொடுத்துள்ளேன் என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாட்டில்களின் மூடி வேறு எந்த கம்பெனி வகையாக இருந்தது என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அறிக்கையில் அந்த விவரத்தை சொல்லவில்லை.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.